3. **அரசினர் சட்ட முன்வடிவுகள்**—தொடர்ச்சி. [1979 நவம்பர் 2

(ஆ) திரைப்படங்கள் முறைப்படுத்துதல் திருத்த சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே,

'தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு திரைப்படங்கள் முறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 59/1979) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

என்று மொழிகிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 21 கோடி ரூபாய் தொகையை பெற்றுக் கொள்வதற்கு இங்கே நிதி ஒதுக்கல் மசோதாவை கொண்டு வந்திருக் கிறார்கள். இந்த அவை நிச்சயமாக 21 கோடி ரூபாயை அனுமதித்துக் கொடுக்கத்தான் போகிறது. அவர்களே சொல்லி இருக்கிறார்கள், இப்படி அனுமதித்துக் கொடுக்கப்படும் நிதியில் ஒரு பைசா கூட தவறாக, ஒழுங்கு கேடாக செலவழிக்கப்படமாட்டாது என்பதை உறுதியாக கூறியிருக் கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பட்ஜெட் தயாரிக்கின்ற போது, அதிகமான செலவைக் காட்டி பற்றாக் குறையும் காண்பித்து, வரியும் போடாமல் இருந்து விட்டு, இவ்வளவு பற்றாக்குறை இருக்கிறது. இருந்தும் வரிகளைப் போடாமல் இந்த பட்ஜெட்டை தயாரித்து இருக்கிறோம் என்று சொல்வது, இது ஒரு கட்சிக்கு என்று மட்டுமல்ல, எல்லா கட்சிகளுக்குமே பொருந்தும். அடுத்த ஆண்டு கணக்கைப் பார்த்தால் செலவு குறைந்து இருக்கிறது. 1977-78 ஆம் ஆண்டு அக்கௌன்டன்ட்-ஜெனரலின் அறிக்கை வந்தபோது, அதைபார்க்கின்ற நேரத்தில் அந்த ஆண்டு சபையில் அனுமதித்த சார்ஜ்டு ஐட்டம் அல்ல.